

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.11.2025) உடல்நலக்குறைவால் இயற்கை எய்திய கவிஞர் ஈரோடு தமிழன்பன் அவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று, அவரது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். அமைச்சர் மா.சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா, டி.கே.எஸ்.இளங்கோவன், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் உறுப்பினர் செயலாளர் திருமதி விஜயா தாயன்பன் ஆகியோர் உடனிருந்தனர்.

தமிழுக்கு வளம் சேர்த்த

# கவிஞர் ஈரோடு தமிழன்பன் மறைவுச் செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தியில் புகழாரம்!

சென்னை, நவ. 23 -

கவிஞர் ஈரோடு தமிழன்பன் அவர்களின் மறைவையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

மரபுக்கவிதை, புதுக்கவிதை என இரண்டிலும் சிறந்து, தமிழுக்கு வளம் சேர்த்த கவிஞர் ஈரோடு தமிழன்பன் என்கிற ந.செகதீசன் மறைந்த செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களுடன் பத்தாண்டுகள் நெருங்கிப் பழகிய சிறப்புக்கு ரியவர் ஈரோடு தமிழன்பன். சென்னை தொலைக்காட்சி நிலையத்தில் செய்தி வாசிப்பாளர், பேராசிரியர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் நிர்வாகக் குழு உறுப்பினர், அறிவியல் தமிழ் மன்ற உறுப்பினர், அரிமா நோக்கு இதழின் ஆசிரியர் எனப் பல்வேறு பொறுப்புகளில் அவர் ஆற்றிய பணிகளும் எழுதிய நூல்களும் ஏராளம்.

தமது இடையறாத தமிழ்ப் பணிகளுக்கு அங்கீகாரமாகக் கலைமாமணி, சாகித்ய அகாதெமி, பாரதிதாசன் விருது, சிறந்த நூலுக்கான தமிழ்நாடு அரசின் விருது, குறள்பீட விருது, முரசொலி அறக்கட்டளையின் கலைஞர் விருது, கவிக்கோ விருது என எண்ணற்ற விருதுகளைப் பெற்று அவற்றுக்குப் பெருமை சேர்த்



திருக்கிறார் கவிஞர் ஈரோடு தமிழன்பன் அவர்கள்.

நமது திராவிட மாடல் ஆட்சிக்கு வந்ததும், 2022ஆம் ஆண்டு முத்தமிழறிஞரின் பிறந்தநாளில் கனவு இல்லம் திட்டம் திட்டத்தின்கீழ், அவருக்கு அடுக்குமாடிக் குடியிருப்பில் வீடு வழங்கியிருந்தோம். மேலும், அவர் இயற்றிய 'கீழடியில் கேட்ட தாலாட்டுகள்', 'நெருக்கடி நேரத்தில் கலைஞரோடு (கவிதைகளும் கட்டுரைகளும்) ஆகிய நூல்களையும், வட அமெரிக்க ஈரோடு தமிழன்பன் வாசகர் பேரவை தயாரித்துள்ள, ஈரோடு தமிழன்பன் அவர்களின் வாழ்க்கை வரலாறு குறித்த "மகாகவி" என்ற ஆவணப் படத்தையும் முதலமைச்சராக வெளியிடும் பேற்றினைப் பெற்றிருந்ததை இவ்வேளையில் நினைவு கூர்கிறேன்.

இறுதிக்காலம் வரையிலும் பல வகைமைகளிலும் தமிழுக்குத் தொண்டாற்றிய, நீண்ட நெடிய பெருவாழ்வுக்குச் சொந்தக்காரரான கவிஞர் ஈரோடு தமிழன்பனை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தினருக்கும், தமிழன்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

# தமிழ் இலக்கியத்துக்கு அளவிட முடியா பங்களிப்பு செய்தவர்!

## கவிஞர் ஈரோடு தமிழன்பன் மறைவுக்கு- துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, நவ. 23 -

கவிஞர் ஈரோடு தமிழன்பன் அவர்களின் மறைவையொட்டி துணை முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:

தமிழ் இலக்கியத்துக்கு அளவிட முடியா பங்களிப்பைச் செய்த பெருமதிப்பிற்குரிய கவிஞர் ஈரோடு தமிழன்பன் அவர்கள் மறைவுச் செய்தி அறிந்து வருத்தமுற்றேன்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் முதல் மகா கவிஞர் பாப்லோ நெரூதா வரை தனது இலக்கியச் சிறகை விரித்தவர்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நேசிப்புக்குரிய எழுத்துலக நண்பர். மரபுக் கவிஞராய் தொடங்கி புதுக்கவிதையிலும் புதிய அலைகளை ஏற்படுத்திய படைப்பாளி.

'வணக்கம் வள்ளுவ' நூலுக்காக சாகித்ய அகாதெமி விருது பெற்ற கவிஞர் தமிழன்பன் அவர்கள், திராவிட இயக்கத்தின் மீது அசைக்க முடியாத பற்றுக் கொண்டிருந்தார்.

ஈரோடு தமிழன்பன் அவர்களின் மறைவு, இலக்கிய உலகத்திற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அவரது மறைவுக்கு இரங்கலையும், அவரது குடும்பத்தினர் நண்பர்கள் வாசகர்களுக்கு ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

# அருமைத் தோழர் கவிஞர் ஈரோடு தமிழன்பன் மறைவுக்கு நமது வீரவணக்கம்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி இரங்கல்!

*சென்னை, நவ. 23 -*

*திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-*

*நமது அருமைத் தோழர் கவிஞர் ஈரோடு தமிழன்பன் தமது 92ஆம் வயதில் (21.11.2025) மறைவுற்றார் என்ற செய்தி அறிந்து பெரிதும் வருந்துகிறோம். அவரின் இழப்பு எளிதில் ஈடு செய்யப்பட முடியாத பேரிழப்பாகும்.*

*புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பரம்பரை என்று போற்றத் தகுந்த கவிஞர்களுள் முதல் வரிசையில் உள்ளவர். முற்போக்குச் சிந்தனை யாளர்!*

*சென்னிமலையில் பிறந்தாலும் தம் பெயருக்கு முன்னொட்டமாக ஈரோடு என்று புனைந்து கொண்ட கொள்கை சார்ந்த தந்தை பெரியார் பற்றாளர்.*

*மறைந்த பெரும்புலவர் பெரியார் பேருரையாளர் பேராசிரியர் ந.இராமநாதன் அவர்களின் மாணவர் ஆவார். நம் இயக்கத் தொடர்பான பல்வேறு நிகழ்ச்சிகளில், கவியரங்குகளில் பங்கு கொண்டு மகிழ்ந்தவர்!*

*மரபுக் கவிதையில் தொடங்கி நவீன புதுக்கவிதை முறைக்கு முன்னோடியாக இருந்தவர். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் வழங்கிய கலைஞர் மு.கருணாநிதி செம்மொழி விருது, வட அமெரிக்கத் தமிழ் சங்கத்தின் 'உலக தமிழ்ப் பீட விருது' போன்ற பல உயரிய விருதுகளைப் பெற்றவர்.*

*இவரின் படைப்புகள் 90க்கும் மேற்பட்ட கவிதை உரைநடைத் தொகுப்புகளாக வெளிவந்துள்ளன. வணக்கம் வள்ளுவ என்ற கவிதைப் படைப்பு நூலுக்குச் சாகித்ய அகாடமி விருது பெற்றவர். உலகின் பல நாடுகளிலும் பயணித்து, கவிதைச் சிறகை விரித்தவர். சென்னை புதுக்கல்லூரியில் தமிழ்த்துறைப் பேராசிரியராகப் பணியாற்றிய கலைமாமணி ஈரோடு தமிழன்பன் அவர்களுக்கு சாந்தகுமாரி என்ற வாழ்விணையாரும், பாப்லோ நெருடா (டாக்டர்) (சிலி நாட்டின் உலகப் புகழ் பெற்ற கவிஞரின் பெயர் இது), பாரதிதாசன் (டாக்டர்) ஆகிய இரு மகன்கள் இவருக்கு உண்டு.*

*குடும்பத் தலைவரை இழந்து வாடும் குடும்பத்தாருக்கும் உற்ற தமிழ்ச் சுறும் நல்லுலக நண்பர்களுக்கும், அன்பர்களுக்கும், கழகத்தின் சார்பில் ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.*

*இவ்வாறு அவர் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.*

மசோதா நிறைவேற்ற காலக்கெடு நிர்ணயிக்க வேண்டும்!

# முதல்வருக்கு தோள் கொடுத்து அவரது கரத்தை வலுப்படுத்துவோம்!

## 'தினகரன்' தலையங்கத்தில் அழைப்பு!

சென்னை, நவ. 23–

உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பு குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிடுகையில் மசோதாக்களை நிறைவேற்ற காலக்கெடு நிர்ணயிக்க வேண்டும் எனவும் அதற்காக போராடவும் தயங்க மாட்டோம் என கூறியுள்ளார். இந்த கருத்தை கொண்டு 'தினகரன்' தலையங்கத்தில் அழைப்பு விடுத்துள்ளது.



தினகரன்

நவம்பர் 22, 2025 சனிக்கிழமை

கரம் வலுப்படுத்துவோம்

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுக்கே அதிகாரம் உள்ளது. ஒரு மாநிலத்தில் 2 நிர்வாக அதிகார மையங்கள் இருக்க கூடாது என்று உச்ச நீதிமன்றம் நேற்றுமுன்தினம் வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பு அளித்துள்ளது. சட்டசபையில் நிறைவேற்றி அனுப்பப்படும் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க குடியரசு தலைவர் மற்றும் ஆளுநர் தரப்பு தாமதிக்க கூடாது எனவும் அந்த தீர்ப்பில் கூறியுள்ளது. இந்த விவகாரத்தில் குடியரசு தலைவர் திரவுபதி முர்மு 14 கேள்விகளை ...

அது வருமாறு:–

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுக்கே அதிகாரம் உள்ளது, ஒரு மாநிலத்தில் 2 நிர்வாக அதிகார மையங்கள் இருக்கக் கூடாது என்று உச்ச நீதிமன்றம் நேற்றுமுன்தினம் வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பு அளித்துள்ளது. சட்டசபையில் நிறைவேற்றி அனுப்பப்படும் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க குடியரசுத் தலைவர் மற்றும் ஆளுநர் தரப்பு தாமதிக்கக் கூடாது எனவும் அந்த தீர்ப்பில் கூறியுள்ளது. இந்த விவகாரத்தில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு 14 கேள்விகளை எழுப்பி உச்ச நீதிமன்றத்திடம் ஏற்கனவே விளக்கம் கேட்டிருந்தார்.

இந்த விவகாரம் தொடர்பாக தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் தலைமையிலான அரசியல் சாசன அமர்வு இந்த தீர்ப்பு வழங்கியுள்ளது. ஆளுநர் நீண்ட காலத்திற்கு மசோதாவை நிறுத்தி வைப்பது என்பது கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிரானது. மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்கவில்லை என்றால், அதனை சட்ட சபைக்கு திருப்பி அனுப்ப வேண்டும். நிதி மசோதாவாக இல்லாமல் இருந்தால், அதனை சட்ட சபைக்கு திருப்பி அனுப்ப வேண்டும்.

ஒரு சட்டப்பிரிவுக்கு 2 வகையான வாய்ப்பு இருந்தால், எது சுமூக நிலையோ, அதையே பின்பற்ற வேண்டும். காரணம் தெரிவிக்காமல் நீண்ட காலம் மசோதாவை நிறுத்தி வைக்கக் கூடாது, அமைச்சரவையின் ஆலோசனைப்படியே ஆளுநர் செயல்பட வேண்டும் எனவும் உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தி உள்ளது. இந்திய அரசியலமைப்புச் சட்டம், சில தனி உரிமைகளை ஆளுநருக்கு வழங்கி இருக்கிறது. காரணமின்றி மசோதாவை நிறுத்தி வைக்கும் அதிகாரம் ஆளுநருக்கு இல்லை.

ஒன்று மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்கவேண்டும், இரண்டு ஜனாதிபதிக்கு அனுப்பலாம். மூன்று சட்ட சபைக்கு திருப்பி அனுப்பலாம். இந்த மூன்று வாய்ப்புகள் மட்டுமே ஆளுநருக்கு உள்ளது. இந்த மூன்றில் ஒன்றை தேர்ந்தெடுப்பதே ஆளுநருக்கான தனிப்பட்ட அதிகாரம் ஆகும். மசோதாக்களை நிறுத்தி வைக்கும் நான்காவது வாய்ப்பு இல்லை என்று உச்ச நீதிமன்றம் தெளிவுபட கூறியுள்ளது.

தமிழ்நாடு சட்டப்பேரவையில் மீண்டும் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்காமல் ஆளுநர் நிலுவையில் வைத்திருந்தது அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானது என்று கடந்த ஏப்ரல் மாதம் தீர்ப்பளித்த உச்ச நீதிமன்றம், அவ்வாறான10 மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்கியது. இந்தத் தீர்ப்பு குறித்து விளக்கம்கோரி அரசியல் சாசனத்தின் 143வது பிரிவின்கீழ் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு கேட்ட விளக்கத்துக்கு உச்ச நீதிமன்றத்தின் 5 நீதிபதிகள் அடங்கிய அமர்வு விளக்கம் அளித்துள்ளது.

தமிழ்நாடு அரசின், பல்கலைக் கழகங்கள் தொடர்பான 12 மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்காமல் ஆளுநர் நிலுவையில் வைத்திருந்தது 'சட்டவிரோதம்' எனக்கூறி, சட்டப்பிரிவு 142ன் கீழ் தனக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்கியது உச்ச நீதிமன்றம். அதோடு, மசோதாக்களுக்கு ஆளுநர் விரைந்து ஒப்புதல் அளிக்கவும் வலியுறுத்தியது.

மாநில சட்டப்பேரவையால் அனுப்பி வைக்கப்படும் மசோதாக் களை காலவரம்பின்றி நிறுத்தி வைக்க ஆளுநருக்கு அதிகாரம் இல்லை என்று குறிப்பிட்டுள்ள உச்ச நீதிமன்றம், ஆளுநர் செயல்படாவிட்டால் நீதிமன்றம் தலையிடும் எனவும் எச்சரித்துள்ளது. இது, ஆளுநர்களுக்கு உச்ச நீதிமன்றம் கொடுத்துள்ள சம்மட்டி அடி ஆகும்.

மசோதாவை நிறைவேற்ற ஒரு காலக்கெடுவை, நிர்ணயிக்க வேண்டும் இது, நிறைவேறும் வரை ஓயமாட்டோம் என முதல்வர் சூளுரைத்துள்ளார். நியாயத்தின் பக்கம் நின்று போராடும் அவருக்கு தோளோடு தோள் கொடுத்து, அவரது கரத்தை வலுப்படுத்துவோம்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ. ஏற்பாட்டில்

# முன்னாள் அமைச்சர், சி.வி.எம்.அண்ணாமலை 109வது பிறந்த நாள் விழா!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. நல உதவிகள் வழங்கினார்!

*காஞ்சிபுரம், நவ. 23 -*

*தந்தை பெரியார் அவர்களின் சீடரும், பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் தம்பியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உற்ற நண்பருமான முன்னாள் அமைச்சர், செந்தமிழ்ச்செல்வர் சி.வி.எம். அண்ணாமலை அவர்களின் 109வது பிறந்த நாளை முன்னிட்டு, அவரது பெயரனும், கழக கொள்கைப் பரப்புச் செயலாளர், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன் ஏற்பாட்டில், கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் மற்றும் இளந்தலைவர் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாரலின் ஆகியோ ரின் வழிகாட்டுதலின்படி, மண்டல பொறுப்பாளர், அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மாவட்ட பொறுப்பு அமைச்சர், ஆர். காந்தி ஆகியோரின் வாழ்த்துகளுடன், காஞ்சிபுரம் சட்டமன்ற தொகுதி யிலுள்ள, காஞ்சிபுரம் மாநகரத்தின் அனைத்து வட்டங்களிலும், காஞ்சிபுரம் ஒன்றியம், வாலாஜாபாத் ஒன்றியத்திலுள்ள அனைத்து ஊராட்சிகளில் உள்ள கழக முன்னோடிகளை போற்றி அவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில், 109 கழக முன்னோடி களின் இல்லங்களுக்கே நேரடியாக சென்று, அவர்களின் தினசரி பயன்பாட்டிற்குரிய உடை உள்ளிட்ட பொருட்கள் அடங்கிய பெட்டகமும், பழக்கூடையும், நிதியுதவி வழங்கும் நிகழ்வு, காஞ்சிபுரம் மாநகரம், 1வது பகுதி கழகத்தில் நேற்று (22.11.2025) காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர், எம்.எல்.ஏ., பங்கேற்று தொடங்கி வைத்தார்.*

*முதற்கட்டமாக, காஞ்சிபுரம் மாநகரம், 1வது பகுதி கழகத்தில் 13 மூத்த முன்னோடிகளுக்கும், 2வது பகுதி கழகத்தில் 12 மூத்த முன்னோடிகளுக்கும் சிறப்பு செய்யப் பட்டது.*

*நிகழ்ச்சியில், மாவட்டப் பொருளாளர் சன்பிராண்ட் கே.ஆறுமுகம், காஞ்சிபுரம் மாநகரச் செயலாளர் சி. கே.வி.தமிழ்ச்செல்வன், மாநகராட்சி மேயர் மகாலட்சுமி, ஒன்றியச் செயலாளர் பி.எம். குமார், பகுதிக் கழகச் செயலாளர்கள் கே.திலகர், எஸ். சந்துரு, சு.வெங்கடேசன், வாலாஜாபாத் வடக்கு ஒன்றியச் செயலாளர் பி.எம்.பாபு, தலைமைக் கழக செயற்குழு உறுப்பினர் எம்.எஸ். சுகுமார், கழக நெசவாளர் அணி செயலாளர் டி. அன்பழகன், கழக வர்த்தக அணி துணை செயலாளர் வி.எஸ்.இராமகிருஷ்ணன், கழக நிர்வாகிகள் ஜி.குமரேசன், வி.பகவான், தனலட்சுமி, ஆர். வினோத்குமார், பாஸ்கர், சதிஷ், வட்ட செயலாளர்கள் டி.எஸ். சாகுல்அமீது, க. செல்வம், டி. ஜெய்கணேஷ், எஸ். செந்தில், கே. சண்முகம், எஸ். வரதன், இ. சந்தானம், பி. பார்த்திபன், ஏ.எஸ்.ரவி, கே.எஸ். வேல்முருகன், இ. இளங்கோவன், மாமன்ற உறுப்பினர்கள் அஸ்மா பேகம், நிர்மலா, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், பிரதிநிதி கள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள், பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்துக் கொண்டனர்.*

ஜெ கருணாநிதி - கே.ஏழுமலை - ரத்னா லோகேஸ்வரன்- பா.கார்த்திகா பங்கேற்பு!

# 132 அ' வட்ட கழக BLA2 - BDA - BLC ஆலோசனைக் கூட்டம்!

## வட்டச் செயலாளர் கே.எஸ்.வெல்டிங்ராஜா அறிக்கை!

*சென்னை, நவ. 23 -*

*சென்னை தென் மேற்கு மாவட்ட தியாகராய நகர் மேற்கு பகுதி 132 'அ' வட்ட கழக BLA2 BDA, BLC மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள் கூட்டம் என்12/29. சக்கரபாணி தெரு விரிவு மேற்கு மாம்பலம் சென்னை 33ல் உள்ள மாமன்ற உறுப்பினர் அலுவலக அருகில் இன்று ( 23-11-2025 ஞாயிற்றுக்கிழமை) மாலை 6 மணி அளவில் அவைத்தலைவர்.சுப. எம்.முருகன் தலைமையில் தென்மேற்கு மாவட்டகழக செயலாளர் மயிலை.த.வேலு எம்.எல்.ஏ., ஆலோசனையின் படி , சட்டமன்ற உறுப்பினர், ஜெ.கருணாநிதி, மேற்கு பகுதிகழக செயலாளர் எம்.சி., தொகுதி பார்வையாளர் திருமதி.ரத்னா லோகேஸ்வரன். எம். சி., திருமதி. பா.கார்த்தகா பாஸ்கர் எம்.சி., கே.எஸ்.வெல்டிங்ராஜா ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.*

*இளைஞர் எழுச்சி நாள் மற்றும் எதிர்வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் சிறப்பாக பணியாற்றுவது , வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பாக BLA2, BDA, BLC மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள் அவசர ஆலோசனை கூட்டம் நடைபெறுகிறது.*

*ஆகவே கூட்டத்திற்கு வட்டத்திற் குட்பட்ட செயற்குழு உறுப்பினர்கள் பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், வட்டக் கழக நிர்வாகிகள், பகுதி பிரதிநிதிகள், இளைஞர் அணி, மகளிர் அணி சுற்றுச்சூழல் அணி ,மகளிர் தொண்டர் அணி, வழக்கறிஞர் அணி, ஆதிதிராவிடர் அணி, இலக்கிய அணி, மாணவர் அணி, வர்த்தக அணி, தொண்டர் அணி, சிறுபான்மை ராணி, பொறியாளர் அணி, தகவல் தொழில் நுட்ப அணி, தொழிலாளர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள்,பாக முகவர்களின் அணி, தொ.மு.சா தொழிலாளர் தொழில் சங்கம் கழகத்தின் இந்நாள் முன்னாள் நிர்வாகிகள் கழக முன்னோடிகள் அனைவரும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு வட்டச் செயலாளர் கே.எஸ்.வெல்டிங்ராஜா அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.*



இளைஞர் எழுச்சி நாளை முன்னிட்டு திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருவள்ளூர் தொகுதி கடம்பத்தூர் பகுதியில் 248 தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆலோசனைப்படி மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம். எல்.ஏ. வழிகாட்டுதல்படி நடைபெற்றது. இதில் மாவட்ட துணைச் செயலாளர் டாக்டர் வி.சி.ஆர். குமரன் தூய்மை பணியாள ர்களுக்கு அரிசி காய்கறிகள் மளிகைப் பொருட்கள் அறுசுவை உணவு வழங்கினார். உடன் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

